# கன்னியாகுமரி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலக உதவி இயக்குநர் அவர்களது செயல்முறை ஆணைகள்

*********

முன்னிலை: திரு.கி. செந்தில்குமார்,எம்.ஏ.,
உதவி இயக்குநர், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம்,
இருப்பு: நாகர்கோவில்.

**செயல்முறை ஆணை எண்.அ1/5186/2017 நாள்: 27.06.2017**

பொருள்: நிர்வாகம் - மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் நாகர்கோவில் செல்வி. மூ. உமா, தட்டச்சர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், நாகர்கோவில் -தட்டச்சர் நிலையில் பணிவரன்முறை செய்து தகுதிகான் பருவத்தில் வைத்து ஆணை பிறப்பித்தல் -தொடர்பாக.

பார்வை:

1. இயக்குநர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை , சென்னை அவர்களின் செயல்முறை ஆணை நிர்2/3904/2016, நாள்:8.02.2016.
2. மதுரை, மண்டல இணை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை எண்: அ1/2891/2016, நாள்: 03.06.2016.

*********

ஆணைகள்:

பார்வை (1)ல் காணும் இயக்குநர் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை சென்னை அவர்களின் செயல்முறை ஆணையின் படி தூத்துக்குடி மாவட்டவேலைவாய்ப்பு அலுவலகத்தில் தட்டச்சராக 17.02.2016 மு.ப. பணியில் சேர்ந்தார். பார்வை (2)-இல் காணும் மதுரை மண்டல இணை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி தூத்துக்குடி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து நாகர்கோவில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு தட்டச்சர் நிலையில் இடமாறுதல் செய்யப்பட்டார். இதனைத்தொடர்ந்து செல்வி மூ. உமா தட்டச்சர் அவர்கள் தூத்துக்குடி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் 07.06.2016 பிற்பகல் விடுவிக்கப்பட்டு . நாகர்கோவில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் 23.06.2016 மு.ப. பணியில் சேர்ந்தார். அவர் தூத்துக்குடி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பணியில் இருந்த காலத்தில் 06.04.2016 முதல் 04.05.2016 ஊதியமில்லா விடுப்பில் சென்றிருந்தார். மீண்டும் 05.05.2016 மு.ப.பணியில் சேர்ந்து 06.05.2016 முதல் 07.06.2016 வரையிலான காலத்திற்கு ஊதியமில்லா விடுப்பில் சென்றிருந்தார். எனவே மேற்குறிப்பிட்ட மொத்த ஊதியமில்லா விடுப்பில் 70 நாட்கள் விடுப்பில் சென்றதின் காரணமாக உரிய காலக்கெடுவிற்குள் (17.02.2017) பணிவரன்முறை செய்யப்படவில்லை என்பதால் செல்வி மூ. உமா அவர்கள் 23.06.2016 முற்பகல் இவ்வலுவலகத்தில் தட்டச்சராக பணியேற்ற நாளிலிருந்து பணிவரன்முறை செய்து இதன்மூலம் ஆணையிடப்படுகிறது.

உதவி இயக்குநர்
மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம்,
நாகர்கோவில்.

பெறுநர்

1. செல்வி. மூ. உமா
   தட்டச்சர்,
   மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம்,
   நாகர்கோவில்
2. பணிப்பதிவேடு, கோப்பு

Scanned by CamScanner